தினமலர்
உண்மையின் உரைகல்
12.05.2024

# சமூக ஆர்வலர் வெட்டப்பட்ட வழக்கு புலனாய்வு குழு அமைக்க வலியுறுத்தல்

**திருநெல்வேலி, மே 12–**

சமூக ஆர்வலர் பெர்டின் ராயன் மீதான கொலைவெறி தாக்குதல் தொடர்பாக மாவட்ட கலெக்டர் மற்றும் மாநகர போலீஸ் கமிஷனர் ஆகியோரை சந்தித்து புகார் மனு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் வக்கீல் ஹென்றி திபேன் நிருபர்களிடம் கூறியதாவது:

பெர்டின்ராயன் வெட்டப்பட்ட சம்பவம் குறித்த சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும். மாநகர துணை கமிஷனர் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்க வேண்டும். மனித உரிமை காப்பாளரை கொலை செய்ய சதி திட்டம் தீட்டியவர்கள் மீதும், கொடூரதாக்குதல் நடத்தியவர்கள் மீதும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து சிறப்பு குழு அமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இதில் எஸ்டிபிஐ கட்சியின் நெல்லை மாநகர் மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது உஸ்மானி, மாவட்டச் செயலாளர் அன்வர்ஷா, எஸ்.டி.டி.யு. தொழிற்சங்க மாவட்ட தலைவர் வக்கீல் ஆரிப்பாட்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கோரிக்கைகள் தொடர்பாக நெல்லையில் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் வக்கீல் ஹென்றி திபேன் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தார்.